கொடைக்கானலில் இடம் வாங்க விற்க அணுகவும்.
கொடைக்கானல் மற்றும் மேல் மலைப் பகுதிகளில் எஸ்டேட், பல வகை தோட்டங்கள், வீடு கெஸ்ட் ஹவுஸ் விற்க எங்களை அணுகவும்
தொடர்புக்கு:
98426-99466, 78100 - 68421, 94884 - 20449

PRGI.NO.TNTAM/25/A1635

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS

மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்

காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 154 | 09-12-2025 | செவ்வாய் | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி
Volume 01 | Issue: 154 | 09-12-2025 | Tuesday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy

# வந்தே மாதரம் ஒரு மந்திரம்; சுதந்திர இயக்கத்துக்கு உத்வேகம் கொடுத்த முழக்கம் : பிரதமர் மோடி

புதுடெல்லி: டிச.9–

வந்தே மாதரம் என்பது ஒரு மந்திரம், சுதந்திர இயக்கத்துக்கு சக்தி மற்றும் உத்வேகத்தைக் கொடுத்த, தியாகம் மற்றும் தவத்துக்கான பாதையைக் காட்டிய ஒரு முழக்கம் என்று பிரதமர் நரேந்திர மோடி வந்தே மாதரம் பாடலுக்கு புகழாரம் சூட்டியுள்ளார்.

வந்தே மாதரம் பாடலின் 150 வது ஆண்டை கொண்டாடும் விதமாக நாடாளுமன்றத்தில் சிறப்பு விவாதம் இன்று தொடங்கியது. விவாதத்தை மக்களவையில் தொடங்கிவைத்து பிரதமர் மோடி உரையாற்றினார். அவர் தனது உரையில், “வந்தே மாதரம் என்பது ஒரு மந்திரம், சுதந்திர இயக்கத்துக்கு சக்தி மற்றும் உத்வேகத்தைக் கொடுத்த ஒரு முழக்கம், தியாகம் மற்றும் தவத்துக்கான பாதையைக் காட்டிய ஒரு முழக்கம். வந்தே மாதரத்தின் 150வது ஆண்டைக் கொண்டாட்டத்தின் சாட்சிகளாக நாம் இருப்பது பெருமைக்குரிய விஷயம். இது ஒரு வரலாற்றுத் தருணம். பல வரலாற்று நிகழ்வுகள் மைல்கற்களாகக் கொண்டாடப் படும் ஒரு காலம் இது.

சமீபத்தில் நமது அரசியலமைப்பின் 75வது ஆண்டை நாடு கொண்டாடியது. சர்தார் படேல் மற்றும் பிர்சா முண்டாவின் 150வது பிறந்த நாளை நாடு கொண்டாடுகிறது. குரு தேக் பகதூரின் 350வது தியாக தினத்தை கொண்டாடுகிறோம். இப்போது, நாம் வந்தே மாதரத்தின் 150வது ஆண்டைக் கொண்டாடுகிறோம்.

வந்தே மாதரம் 50 ஆண்டுகளை நிறைவு செய்தபோது இந்தியா பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்தது. 100 ஆண்டுகளை நிறைவு செய்தபோது இந்தியா அவசரநிலையின் பிடியின் கீழ் இருந்தது. அப்போது, தேசபக்தர்கள் சிறையில் அடைக்கப்பட்டார்கள். நமது சுதந்திர இயக்கத்துக்கு உத்வேகம் அளித்த பாடலின் 100வது ஆண்டு நிறைவின்போது துரதிருஷ்டவசமாக நாடு ஒரு கருப்புக் காலகட்டத்தைக் கண்டது.

வந்தே மாதரத்தின் 150வது ஆண்டு என்பது, அதன் பெருமையையும் நமது கடந்த காலத்தில் அதற்கு இருந்த பங்கினையும் மீண்டும் நிலைநிறுத்த ஒரு வாய்ப்பாகும். 1947ம் ஆண்டு நமடு சுதந்திரம் பெற இந்த பாடல் உந்து சக்தியாக இருந்தது.

வந்தே மாதரம் பாடலின் ஆழத்தை நாம் அனைவருமாக சேர்ந்து ஏற்கவும், பாராட்டவும் நாம் இங்கே கூடி இருக்கிறோம். இந்த பாடலால்தான் நாம் அனைவரும் இங்கே ஒன்றாக இருக்கிறோம். இது ஒரு புனிதமான சந்தர்ப்பம். இது வடக்கில் இருந்து தெற்கு வரையும், கிழக்கில் இருந்து மேற்கு வரையும் நாட்டை ஒன்றிணைத்தது. மீண்டும் ஒன்றிணைந்து நாம் அனைவருடனும் இணைந்து பயணிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது.

இந்த பாடல் நமது சுதந்திரப் போராட்ட வீரர்களின் கனவுகளை நிறைவேற்ற நம்மை ஊக்குவிப்பதாகவும், உற்சாகப்படுத்துவதாகவும் இருக்கட்டும். 2047க்குள் நமது தேசத்தை சுயசார்பு கொண்டதாகவும் வளர்ச்சி அடைந்ததாகவும் மாற்றுவதற்கான உறுதியை நாம் மீண்டும் வலியுறுத்துவோம்.

வந்தே மாதரம் என்பது அரசியல் ரீதியில் நாம் சுதந்திரம் அடைவதற்கான ஒரு மந்திரம் மட்டுமல்ல. அது நமது சுதந்திரத்துக்கானது மட்டுமல்ல. அதற்கும் அப்பாற்பட்டது. சுதந்திர இயக்கம் என்பது நமது தாய்நாட்டை அடிமைத்தனத்தின் பிடியில் இருந்து விடுவிப்பதற்கான ஒரு போர். நமது வேதங்களில், இந்த நிலம் எனது தாய்; நான் இந்த மண்ணின் மகன் என்று கூறப்பட்டுள்ளது. வந்தே மாதரம் பாடல் நமது சிறந்த கலாச்சார மரபின் நவீன அவதாரம்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தின்போது இந்தியாவை ஒரு பலவீனமான, பயனற்ற, சோம்பல் மிகுந்த, இழிவான ஒரு நாடாக காட்டுவது ஒரு ஃபேஷனாக மாறியது. நமது நாட்டிலும்கூட இதே போன்று பேசப்பட்டது. இந்நிலையில், நாட்டின் மனசாட்சியை உலுக்கி விழிப்புணர்வை ஏற்படுத்த பங்கிம் சாட்டர்ஜி இந்த பாடலை இயற்றினார். இந்த பாடல், நமது ஆயிரம் ஆண்டுகால வரலாற்றையும் மரபையும் மீட்டுப்பதற்காக இருந்தது.

ஆங்கிலேயர்கள் தங்களின் பிரித்தாளும் சூழ்ச்சிக்கான ஆய்வகமாக வங்களாத்தைப் பயன்படுத்தினர். வங்கத்தின் அறிவுசார் திறன் நாட்டுக்கு வழிகாட்டுவதாகவும், வலிமை மற்றும் உத்வேகத்தை அளிப்பதாகவும் இருப்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். வங்கத்தின் திறன், நாட்டின் மையப் புள்ளி என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். அதனால்தான், அவர்கள் வங்கத்தைப் பிரித்தார்கள். வங்கத்தைப் பிரித்தால் நாடு பிளவுபடும் என்று அவர்கள் நம்பினார்கள். 1905ல் அவர்கள் வங்கத்தை பிரித்தபோது வந்தே மாதரம் பாடல் ஒரு பாறை போல நின்றது” எனத் தெரிவித்தார்.

# நம் எதிரிகளை குறைத்து மதிப்பிடக்கூடாது

## மாவட்ட செயலாளர் கூட்டத்தில் முதலமைச்சர் பேச்சு



“சென்னை: டிச. 9–

முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்ற தலைப்பில் மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தை காணொலி வாயிலாக நடத்தினார். அப்போது அவர் பேசியதாவது: தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையை பாதுகாக்கும் உயரிய நோக்குடன், பசி, உறக்கம், குடும்பம் ஆகியவற்றைத் துறந்து எஸ்.ஐ.ஆர். பணிகளில் ஈடுபட்ட அனைவருக்கும் மனமார்ந்த பாராட்டுகள்... வாழ்த்துகள்.நாம் இவ்வளவு கடினப்பட்டு இருந்தாலும் பாதி கிணறு தான் கடந்துள்ளோம். வெரிபிகேஷன் பணிகள் நிறைவடைந்து, நமது மக்களின் பெயர்கள் விடுபடாமல் வாக்காளர் பட்டியல் வந்தால் தான் முழு கிணற்றையும் கடந்ததாக கருத முடியும். எஸ்.ஐ.ஆர். பணிகள் வாக்குரிமையை பாதுகாக்கும் அடிப்படைப் பணியாக இருந்தால்,\"என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி\" என்பது நமது வெற்றியை உறுதிப்படுத்தும் தேர்தல் பணியாகும்.எனவே, நாம் அனைவரும் களத்தில் மிகுந்த தீவிரத்துடன் பணியாற்ற வேண்டும். உங்கள் ஆற்றலுக்கும் உழைப்புக்கும் முன் எவராலும் நிற்க முடியாது. எத்தனை எதிரிகள் வந்தாலும், எத்தனை அணிகள் செயல்பட்டாலும், தமிழ்நாட்டை மீண்டும் ஆளப்போவது உதயசூரியன்தான். உங்களை உற்சாகப்படுத்தும் நோக்கில் இதை கூறவில்லை. இது தான் உண்மை.நம் திராவிட மாடல் அரசின் திட்டங்களின் மூலம், தமிழ்நாடு முழுவதும் ஒரு கோடியே 86 லட்சம் மக்கள் நேரடியாக பயனடைந்து வருகின்றனர். இதில் பயனாளிகளுடன் சேர்த்து, கழகத்தினரையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். முந்தைய ஆட்சிக்காலங்களில் மழை பெய்தாலே உதவிக்காக காத்திருந்த நிலையும், நிவாரணப் பொருட்கள் மற்றும் உணவு வழங்கும் முறையும் எவ்வாறு மாற்றமடைந்துள்ளது என்பதை மக்களுக்கு களத்தில் எடுத்துச் சொல்ல வேண்டும்.நமது சிறப்பான பணிகளைப் பார்த்து நடுநிலை வாக்காளர்களும் இன்று நமக்கு ஆதரவாக நிற்கின்றனர். மொத்தமாக, பயனாளிகள்கழகத்தினர் நடுநிலை வாக்காளர்கள் என சேர்த்தால், இரண்டு கோடியே ஐம்பது லட்சம் வாக்குகளை தாண்டுவது சாத்தியமே.கடந்த 2021 சட்டப் பேரவைத் தேர்தலில் நமது கூட்டணி பெற்ற வாக்குகள் 2 கோடியே 9 லட்சம் வாக்குகள் தான். இந்த முறை, அதைவிட கூடுதலாக அதிக வாக்குகளைப் பெறுவது உறுதி. இந்த புள்ளிவிவரங்களை முன்வைத்து, உங்கள் களப்பணியின் மீது உள்ள நம்பிக்கையோடு தெளிவாகக் கூறுகிறேன். நாம்தான் மீண்டும் ஆட்சியமைக்க உள்ளோம். இத்தனை சாதகமான சூழ்நிலைகள் இருந்தாலும், நம் எதிரிகளைக் குறைத்து மதிப்பிடக்கூடாது. சி.பி.ஐ, ஈ.டி, ஐ.டி, தேர்தல் ஆணையம், இவையனைத்தையும் அவர்கள் நமக்கு எதிராக பயன்படுத்துவார்கள். தினந்தோறும் எராளமான பொய்கள் பரப்புவார்கள், போலியான பிம்பங்களை உருவாக்கு வார்கள், ஊடகங்களைப் பயன்படுத்தி பொய்ச் செய்திகளை பரப்புவார்கள். இவற்றை எதிர்கொள்ள, நமது பலத்தை நாம் சரியாகப் பயன்படுத்த வேண்டும்.கொள்கைதான் நமது பலம். நிர்வாகிகள் தான் நமது பலம். தீயாக உழைக்கும் கழக உடன்பிறப்புகள் தான் நமது பலம். ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் உள்ள கழக கட்டமைப்பு தான் நமது பலம்.இந்த பலங்களை மிகத் துல்லியமாகப் பயன்படுத்துவதே நமது முக்கியமான வியூகம் ஆக இருக்க வேண்டும். ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் நமது வாக்குகளை உறுதி செய்திருக்க வேண்டும்.ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் நமது கழகத்தினர் உற்சாகத்துடன் செயல்பட வைக்க வேண்டும். அதற்காகத்தான், \"என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி\" என்ற இந்தப் பரப்புரை. அந்தந்த வாக்குச் சாவடிக்குட்பட்ட மாநில நிர்வாகி முதல், வார்டு மற்றும் கிளைச் செயலாளர்கள் வரை அனைவரையும் இந்தக் கூட்டங்களில் பங்கேற்க அழைக்க வேண்டும்.அந்த வாக்குச்சாவடியில் மூத்த கழக முன்னோடிகள் அல்லது ஏதேனும் அதிருப்தியாளர்கள் இருந்தால், அவர்களையும் தவறவிடாமல் அழைக்க வேண்டும். தேனாம்பேட்டையில், என் வாக்குச் சாவடியில் பகுதிச்செயலாளர் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் நானும் நேரடியாகப் பங்கேற்பேன்.வீடு வீடாகச் செல்லும் பூத் கமிட்டி குழுக்களில் மகளிர் கட்டாயம் இடம்பெற வேண்டும்.ஒவ்வொரு பூத் கமிட்டி உறுப்பினரும் வீடு வீடாகச் செல்லுவதை உறுதி செய்யுங்கள். வீடுவீடாக சென்று விடுபட்ட வாக்காளர்களின் விவரங்களை முறையாக சரிபார்க்க வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும், திராவிட மாடல் அரசின் சாதனைகள் அடங்கிய துண்டறிக்கைகள்

(தொடர்ச்சி 2ம் பக்கம்...)

# புதுச்சேரியில் ‘நீதிகதிர் எக்ஸ்பிரஸ்’ நாளிதழ் சார்பில் செய்தியாளர்கள் கலந்தாய்வு கூட்டம்

## அமைச்சர் ஜான்குமார் விருதுகளை வழங்கி பாராட்டு!





புதுச்சேரி: டிச.9–

புதுச்சேரி கடலூர் சாலையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில், ‘நீதிகதிர் எக்ஸ்பிரஸ்’ காலை நாளிதழ் சார்பில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மாநில செய்தியாளர்கள் கலந்தாய்வு மற்றும் ஆலோசனை கூட்டம் (டிசம்பர் 7) மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு நாளிதழின் ஆசிரியரும் வெளியீட்டாளருமான கா. சபியுல்லா தலைமை தாங்கினார். புதுச்சேரி மாநில தலைமை செய்தியாளர் மணிகண்டன், செய்தி ஆசிரியர் எம்.சி. ஆசிக் முஸ்தபா மற்றும் நிர்வாக ஆசிரியர் சதாசிவம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் டெல்லி சிறப்பு பிரதிநிதியும், புதுச்சேரி மாநில அமைச்சருமான கி. ஜான்குமார் அவர்கள் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டார். அவர் செய்தியாளர்களுக்கு ஆலோசனைகளை வழங்கியதோடு, சிறந்த முறையில் பணியாற்றிய செய்தியாளர்களுக்கு விருதுகளை வழங்கி கௌரவித்தார்.

அமைச்சர் ஜான்குமார் பேசுகையில், “தமிழகம் மற்றும் புதுச்சேரியில் பல்வேறு செய்தி நிறுவனங்கள் செயல்பட்டு வரும் நிலையில், ‘நீதிகதிர் எக்ஸ்பிரஸ்’ தனக்கென உரிய பாணியில் வெளிவருவது மகிழ்ச்சி அளிக்கிறது. ஒரு நாளிதழ் நடுநிலையாக இருந்து, சமூக அக்கறையுள்ள உண்மையான செய்திகளை உலகிற்கு எடுத்துரைக்க வேண்டும். அதேபோல், செய்தியாளர்கள் களத்தில் நின்று உண்மையான செய்திகளை மக்களுக்கு வழங்க வேண்டும்,” என்று கூறி நாளிதழையும், செய்தியாளர்களையும் பாராட்டினார்.

விழாவில் பின்வரும் முக்கியப் பிரமுகர்கள் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர்: பூக்கடை கமலக்கண்ணன் (நிறுவனத் தலைவர், புதுச்சேரி ஏழை மக்கள் கழகம்) கராத்தே கதிரவன் (குருகுலம் ஆசான், பாரத் குரூப் ஆப் இன்ஸ்டிடியூஷன், திருப்பத்தூர்) சாகுல் ஹமீத் (வழக்கறிஞர்) பிராங்கிளின் (அரசியல் விமர்சகர், புதுச்சேரி) விமல் முருகன் (திரைப்பட ஒளிப்பதிவாளர், ஈரோடு) கவிஞர் வாலிதாசன் (திரைப்படப் பாடலாசிரியர், சென்னை) Dr. கீதா (தலைவி, கீதாஞ்சலி பெண்கள் நல சங்கம், புதுச்சேரி) நிகழ்ச்சியின் முன்னதாக, கராத்தே கதிரவன் குழுவினரின் சிறப்பான தற்காப்பு கலை சாகச நிகழ்ச்சிகள் செய்தியாளர்கள் மத்தியில் நிகழ்த்திக் காட்டப்பட்டது.

விருது பெற்றவர்கள்: விழாவில் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த செய்தியாளர்கள் மற்றும் ஒளிப்பதிவாளர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

மேலும் சிறந்த பத்திரிகையாளர்களுக்கான விருதுகளை விழுப்புரம்: ராஜா (எ) ராஜசேகர், முரளி (ஒளிப்பதிவாளர்) செங்கல்பட்டு: மணிகண்டன் ராமநாதபுரம்: முகமது சுல்தான் அரியலூர்: ரவிச்சந்திரன் திண்டுக்கல்: பாலமுருகன்

வேலூர்: சுரேஷ் கள்ளக்குறிச்சி (சின்னசேலம்): நடிகர் நரேஷ் (செய்தியாளர் மற்றும் விரைவு செய்தி ஆசிரியர்) திருச்சி: பிரபாகரன், சித்திரவேல் (ஒளிப்பதிவாளர்) நாமக்கல்: யுவராஜ் கோயம்புத்தூர்: முகமது கவுஸ் சேலம்: சுகுமார் (ஒளிப்பதிவாளர்) மற்றும் தாமஸ் பெர்னான்டோ உள்ளிட்டோர் கலந்து கொண்டு விருதுகளைப் பெற்றனர்.

விழாவிற்கான முழு ஏற்பாடுகளையும் திரைப்பட இயக்குனரும், புதுச்சேரி மாநில தலைமை ஒளிப்பதிவாளருமான அஃனி ஆதவன் சிறப்பாகச் செய்திருந்தார். விருது வழங்கிய நாளிதழின் ஆசிரியர் சபியுல்லா அவர்களுக்கு அனைத்து நிருபர்களும், ஒளிப்பதிவாளர்களும் தங்களது நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

# புதுவை முதல்வர் இல்லத்தில் சிறப்பிக்கப்பட்ட ‘நீதி கதிர் எக்ஸ்பிரஸ்’ செய்தியாளர்கள்!

## நேரில் அழைத்து விருது வழங்கி கௌரவிப்பு



புதுச்சேரி: டிச.9–

புதுச்சேரி மாநிலத்தில் பிரபலமான காலை நாளிதழான ‘நீதி கதிர் எக்ஸ்பிரஸ்’ நாளிதழின் செய்தியாளர்கள் கலந்தாய்வு மற்றும் ஆலோசனைக் கூட்டம் வெகு விமரிசையாக நடைபெற்றது. தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவிற்கு நாளிதழின் ஆசிரியரும், வெளியீட்டாளருமான திரு. காசவியுல்லா அவர்கள் தலைமை தாங்கினார்.

முன்னிலை வகித்தோர்:

இந்நிகழ்வில் புதுச்சேரி மாநிலத் தலைமைச் செய்தியாளர் திரு. மணிகண்டன், திரைப்பட இயக்குனரும் மாநில ஒளிப்பதிவாளருமான திரு. அஃனி ஆதவன், செய்தி ஆசிரியர் திரு. எம்.சி. ஆசிக் முஸ்தபா, நிர்வாக ஆசிரியர் திரு. சதாசிவம் மற்றும் சேலம் மாவட்ட செய்தியாளர் மற்றும் விரைவு செய்தி ஆசிரியர் திரு. நரேஷ் ஆகியோர் முன்னிலை வகித்து சிறப்பித்தனர்.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு விருதுகள் வழங்க, புதுச்சேரி மாநில முதலமைச்சர் மாண்புமிகு திரு. என். ரங்கசாமி அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. தவிர்க்க முடியாத அரசுப் பணிகள் காரணமாக முதலமைச்சரால் மண்டபத்திற்கு வருகை தர இயலாத சூழல் ஏற்பட்டது. இருப்பினும், செய்தியாளர்களை ஏமாற்ற விரும்பாத முதலமைச்சர், அவர்கள் அனைவரையும் தனது இல்லத்திற்கே நேரில் வருமாறு அன்போடு அழைப்பு விடுத்தார். இதனைத் தொடர்ந்து, முதலமைச்சரின் இல்லத்திற்குச் சென்ற செய்தியாளர்கள் குழுவை இன்முகத்தோடு வரவேற்ற முதலமைச்சர் ரங்கசாமி அவர்கள், செய்தியாளர்களுக்கு விருதுகளை வழங்கி, சால்வை அணிவித்து கௌரவித்தார். முதல்வரின் இந்த எளிமையான அணுகுமுறையும், பத்திரிகையாளர்கள் மீது அவர் கொண்டிருக்கும் மரியாதையும் அனைவர் மத்தியிலும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

## திருவள்ளூரில் படைவீரர் கொடி நாள் நிதி வசூல்

# மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் துவங்கி வைத்து, 24 நபர்களுக்கு கல்வி உதவித் தொகை ரூ.7.36 லட்சம் மதிப்பிலான நிதி உதவிகளை வழங்கினார்



திருவள்ளூர் டிச 09 :

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் முன்னாள் படைவீரர் நலத்துறை சார்பில் படைவீரர் கொடிநாள் நிதி வழங்கி கொடி நாள் நிதி வசூல் தொடங்கி வைத்து, படைவீரர் கொடிநாள் நிதி கையெட்டினை வெளியிட்டு முன்னாள் படை வீரர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகையாக 24 நபர்களுக்கு ரூ.7.36 இலட்சம் மதிப்பிலான நிதியுதவிகளை மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் வழங்கி பேசினார்.

முன்னாள் படைவீரர் நலத்துறை சார்பில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. நாட்டை பாதுகாக்க எல்லையில் பாதுகாப்பு பணிகள் மற்றும் நாட்டிற்காக உயிர் தியாகம் செய்யும் படைவீர்ரகள் மற்றும் அவர்தம் குடும்பங்களின் நலனுக்கு கொடிநாள் வசூல் செய்யப்படுகிறது. திருவள்ளூர் மாவட்டம் இந்த ஆண்டு 110 சதவிகிதம் இலக்கு அடைந்துள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில் அரசின் இலக்கான ரூ. 5.78 கோடியை விட, தற்போது ரூ.6.37 கோடி கொடி நாள் நிதி வசூல் செய்யப்பட்டுள்ளது. இது சென்னை மாவட்டத் திற்கு அடுத்தபடியாக உள்ளது. நடப்பாண்டில் திருவள்ளூர் மாவட்டத்தில் தொகுப்பு நிதி கல்வி உதவித்தொகை, ஈமச்சடங்கு நிதியுதவி, ஆயுட்கால நிதி உதவிகள் என 279 நபர்களுக்கு ரூ.77.88 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன என மாவட்ட ஆட்சியர் கூறினார்.

இதில் ஐ.என்.எஸ். ராஜாளி கமாண்டன்ட் கார்த்திக், முன்னாள் படை வீரர் நலன் உதவி இயக்குநர் வெங்கடேஷ் குமார், படை வீரர் அவர்தம் குடும்பத்தினர் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சட்ட மேதை புரட்சியாளர் அம்பேத்கர் 69வது நினைவு நாள் மறியலில் நடைபெற்றது.



தஞ்சாவூர் டிச 09.

இந்திய தேசிய காங்கிரஸ் தஞ்சாவூர் வடக்கு மாவட்டம் . சார்பில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிஎஸ்சி எஸ்டி துறையின் துணை தலைவர் தமிழ்ச்செல்வன் தலைமையில் நடைபெற்றது.

தஞ்சாவூர் வடக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி பெதுச்செயலாளர் அருண் சுபாஷ் முன்னிலை வகித்தார்

தஞ்சாவூர் தெற்கு மாவட்டம் தெற்கு வட்டார தலைவர் நாராயண சாமி. இலக்கிய பிரிவு கலைச்செல்வன். தெற்கு மாவட்டம்முன்னால். TCTU தலைவர் சிவக்குமார். சமூக ஆர்வலர். நடுகாவேரி. பிச்சை ரெத்திரனம். ஆகியோர் கலந்துகொண்டு. நாஞ்சிக்கோட்டை சாலையில் உள்ள மறியல் பகுதியில் புரட்சியாளர் அம்பேத்கர் திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்து அரசியலமைப்பு சட்டத்தை பாதுகாப்போம். என்று உறுதிமொழி ஏற்று செம்மார்ந்த வீரவணக்கம் செலுத்தினர்.

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும் பொதுமக்களும் திரளாக கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

# நாடாளுமன்ற தொகுதிகளின் அடிப்படையில் விசிகவில் 39 மண்டல செயலாளர்கள் நியமனம்

சென்னை: டிச. 9–

தமிழகத்தில் உள்ள நாடாளுமன்ற தொகுதிகளின் அடிப்படையில் விடு தலை சிறுத்தைகள் கட்சியில் 39 மண்டல செயலாளர்களை கட்சியின் தலைவர் திருமாவளவன் நியமித்துள்ளார். அத்துடன், 2 சட்டப் பேரவை தொகுதிக்கு ஒரு துணை செயலாளர் வீதம் ஒவ்வொரு நாடாளுமன்ற தொகுதிக்கும் 3 துணை மண்டல செயலாளர்களையும் நியமித்துள்ளார்.

அதன்படி, திருவள்ளூர் நாடாளுமன்ற தொகுதி மண்டல செயலாளராக தளபதி சுந்தர் நியமிக்கப்பட்டுள்ளார். மண்டல துணை செயலாளர்களாக மு.ஏகாம்பரம் (கும்மிடிப்பூண்டி, பொன்னேரி), ஆவடி ராமதாஸ் (மாதவரம், ஆவடி), செஞ்சி செல்வம் (பூந்தமல்லி, திருவள்ளூர்) ஆகியோரும் வட

சென்னை தொகுதி மண்டல செயலாளராக ச.அம்பேத்வளவனும், துணை செயலாளர்களாக நீலமேகவளவன் (திருவொற்றியூர், ராயபுரம்), புரசை அன்பழகன் (திருவிக நகர், கொளத்தூர்), எஸ்.எம் .முனீர் (ஆர்.கே.நகர், பெரம்பூர்) ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தென்சென்னை தொகுதி மண்டல செயலாளராக ரூதர் கார்த்திக், துணை செயலாளர்களாக கதிர் ராவணன் (விருகம்பாக்கம், தி.நகர்), மந்தைவெளி அசோக் (மயிலாப்பூர், சைதாப்பேட்டை), பள்ளிக்கரணை வீரவேல் (வேளச்சேரி சோழிங்க நல்லூர்) ஆகியோரும்.

மத்திய சென்னை தொகுதி மண்டல செயலாளராக ரா.செல்வம், துணை செயலாளர்களாக மு.செல்வம் (துறைமுகம், எழும்பூர்), சி.கே.அர்ஜூன் (திருவல்லிக்கேணி, ஆயிரம் விளக்கு), ராவண செந்தில் (அண்ணாநகர், வில்லிவாக்கம்) ஆகியோரும், திருப்பெரும்புதூர் தொகுதி மண்டல செயலாளராக கு.கதிர்வேல், துணை செயலாளர்களாக தே.ரூபஸ் (அம்பத்தூர், மதுரவாயல்), கென்னடி (ஆலந்தூர், திருப்பெரும்புதூர்), தேவ அருள்பிரகாசம் (பல்லாவரம், தாம்பரம்) ஆகியோரும், காஞ்சிபுரம் தொகுதி மண்டல செயலாளராக ரா.தமிழரசன், துணை செயலாளர்களாக மதிஆதவன் (காஞ்சிபுரம், உத்திரமேரூர்), பொன்னிவளவன் (மதுராந்தகம், செய்யூர்), நா.இளையவன் (செங்கல்பட்டு, திருப்போரூர்) ஆகியோரும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

## ஈரோடு மாவட்ட ஆட்சியர் கூட்ட அரங்கில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்...

# குடிமைப் பணி முதல் நிலை தேர்வு எழுதி வெற்றி பெற்ற பார்வை குறைபாடு உள்ள மாணவிகளுக்கு பரிசுத்தொகை வழங்கல்..





ஈரோடு. டிச.,, 09

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நேற்று நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களின் கோரிக்கை மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்க ஆட்சியர் உத்தரவிட்டார்.

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கத்தில் நேற்று மக்கள் குறைத்திருக்கும் நாள் கூட்டம்.

இந்த கூட்டத்திற்கு ஈரோடு மாவட்ட ஆட்சியர் ச. கந்தசாமி தலைமை வகித்தார்.

கூட்டத்தில் ஈரோடு மாவட்டத்தில் உள்ள பல்வேறு பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள் வந்திருந்து தங்களின் கோரிக்கை மனுக்களை கூட்ட அரங்கில் ஆட்சியரிடம் வழங்கினர்.

மொத்தம் 225 மனுக்கள் வரப்பட்டு இருந்த நிலையில் அந்த மனுக்கள் மீது மேல் நடவடிக்கைக்கு ஆட்சியர் உத்தரவிட்டார்.

மேலும் பொதுமக்களின் மனுக்களின், இலவச வீட்டு மனை பட்டா, இலவச வீட்டு மனை, முதியோர் உதவித் தொகை, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, கருணை அடிப்படையிலான அரசு வேலை, மற்றும் தங்கள் உள்ளூர் பகுதியில் உள்ள பல்வேறு பிரச்சனைகள் குறித்தும் ஆட்சியரிடம் பொதுமக்கள் கோரிக்கை மனுக்களை.

மேலும் காவல்துறை சார்ந்த மனுக்களும், முதலமைச்சர் தனிப்பிரிவு மனுக்களும் ஆய்வு செய்யப்பட்டு மேல் நட வடிக்கைக்கு உத்தரவிடப்பட்டது.

மேலும் கொடுமைப் பணி முதல் நிலை தேர்வில் வெற்றி பெற்ற பார்வை குறைபாடு உள்ள மாணவிகளுக்கு, தலா 50,000 ஊக்கத் தொகையும் வழங்கப்பட்டது.

மேலும் குழந்தைகள் நல திட்ட குழு தலைவர் மற்றும் உறுப்பினர்கள் ஆட்சியரை சந்தித்து பேசினர்.

அந்தப் குழுவில் இடம் பெற்றிருந்த புதியதாக அமைக்கப்பட்ட குழந்தைகள் நல குழு தலைவர் ஆர். ராம பிரபா மற்றும் உறுப்பினர்கள் ஸ்ரீலேகா செல்வம், ஆர். பிரிசிதா, முகமது நசீர், தம்பி ராஜா ஆகியோர் ஆட்சியர் கந்தசாமி மரியாதை நீர்த்தமாக நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

# நம் எதிரிகளை.....

## (முதல்பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்பட வேண்டும். கடுமையாக உழைக்க வேண்டும். நான் இரவிலும் உறங்காமல் உழைத்து வருகிறேன் என்பது உங்களுக்கே தெரியும்.அதே அளவிலானஉழைப்பை,உங்களின்ஒவ்வொருவரிடமிருந்தும் நான் எதிர்பார்க்கிறேன். ஒரு வாக்குச்சாவடியை வென்றால், ஒரு தொகுதியை வெல்லலாம். எனவே, இந்தத் தேர்தலில் ஒவ்வொரு வாக்குச்சாவடியும் மிக முக்கியமானது.உங்கள் வாக்குச்சாவடியில் வெற்றி பெற வேண்டிய பொறுப்பை உங்களிடமே ஒப்படைக்கிறேன். ஒவ்வொருவரும் தங்களது வாக்குச்சாவடிகளில் வென்று வருவீர்கள் என்ற முழு நம்பிக்கையுடன் இந்தப் பொறுப்பை உங்களிடம் ஒப்படைத்துள்ளேன். என் நம்பிக்கையை காப்பாற்றுங்கள்.மீண்டும் வெல்வோம், வரலாறு படைப்போம்.இவ்வாறு அவர் பேசினார்.",

# சேலம் உள்பட 4 மாவட்டங்களில் சுகாதார துறை தீவிர கண்காணிப்பு.

சேலம்,கர்ப்பிணிகளை இரவில் வரவழைத்து கருவின் பாலினத்தை தெரிவிக்கும் கும்பலை பிடிக்க, சேலம் உள்பட 4 மாவட்டங்களில் சுகாதார துறையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

சேலம் மாவட்டம், பேளூர் பகுதியில் மாவட்ட சுகாதார துறையினர் கடந்த 2ம்தேதி ஆய்வு மேற்கொண்டனர். அப்போது, ஒரு வீட்டில் நவீன ஸ்கேன் மிஷினை வைத்து கருவில் உள்ள குழந்தை ஆணா, பெண்ணா என்று பாலினத்தை கண்டறிந்து விதிமுறையை மீறி தெரிவித்த சின்னசேலம் கொடுகூரை சேர்ந்த வெங்கடேசன் (50), புரோக்கர் லதா, வீட்டு உரிமையாளர் சக்திவேல் ஆகியோரை பிடித்து வாழப்பாடி போலீசில் ஒப்படைத்தனர். விசாரணையில், சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர் மாவட்டங்களை சேர்ந்த கர்ப்பிணி பெண்களை இங்கு அழைத்து வந்து, நவீன ஸ்கேன் கருவி மூலம் கருவின் பாலினத்தை தெரிவித்து வந்துள்ளனர். இதற்காக ரூ.30 ஆயிரம் வரை கட்டணமாக வசூலித்துள்ளனர்.

# 14 வயது சிறுமிக்கு பாலியல் துன்புறுத்தல் புதுச்சேரி வாலிபர் போக்சோவில் கைது.

சேலத்தில் 14 வயது சிறுமியிடம் பாலியல் துன்புறுத்தலில் ஈடுபட்ட புதுச்சேரி அரசியல் கட்சி பிரமுகரை,சேலம் மகளிர் போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் அதிரடியாக கைது செய்தனர்.

புதுச்சேரி மாநிலம் புளியந்தோப்பு, தொண்டமாநத்தம் 3வது கிராஸ் பகுதியை சேர்ந்தவர் பாலமுருகன் (38). அரசியல் பிரமுகர். வியாபாரம் செய்து வருகிறார். இவரும், சேலம் மாவட்டம் ஓமலூர் பகுதியை சேர்ந்த ஒரு குடும்பத்தை சேர்ந்தவர்களும் குடும்ப நண்பர்களாக பழகி வந்தனர். இவர்களின் மகளான 14 வயது சிறுமி, 9ம் வகுப்பு படித்து வருகிறார். இந்நிலையில் கடந்த மே மாதம் முதல் பாலமுருகன் அந்த சிறுமியிடம் செல்போனில் பேசி வந்துள்ளார். அச்சிறுமியை அவர் பாலியல் ரீதியில் வீடியோகாலில் டார்ச்சர் செய்து வந்துள்ளார். மேலும் அவரது படத்தை அச்சிறுமியின் நெஞ்சில் பச்சை குத்தவைத்து கொடுமை செய்துள்ளார்.

இதுகுறித்த தகவல் சூரமங்கலம் மகளிர் போலீசாருக்கு கிடைத்தது. இதையடுத்து இன்ஸ்பெக்டர் கவிதா மற்றும் போலீசார் விசாரணை நடத்தினர். இதில் பாலமுருகன் அந்த சிறுமியிடம் அத்துமீறலில் ஈடுபட்டது தெரியவந்தது. இதையடுத்து அவரை போக்சோ சட்டத்தின்கீழ் போலீசார் கைது செய்தனர். அதே நேரத்தில் சாமிநாயக்கன்பட்டியை சேர்ந்த ஹரிஹரசுதன் (38) என்பவரும் சிறுமியிடம் அத்துமீறியது தெரியவந்தது. அவரையும் போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்தனர். பின்னர் சேலம் கோர்ட்டில் ஆஜர்படுத்தி இருவரையும் சிறையில் அடைத்தனர்.



சமூக நல்லிணக்கத்தையும், சமூக ஒற்றுமையினையும் கடைபிடித்தமைக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 2025 ஆம் ஆண்டிற்கான சமூக நல்லிணக்க ஊராட்சி விருது 06.12.2025 அன்று சேலம் மாவட்டம், மணிவிழுந்தான் ஊராட்சிக்கு ரூ.1 கோடி மதிப்பிலான காசோலை வழங்கப்பட்டதைத்தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்களை சந்தித்து வாழ்த்து பெற்றனர்.




தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் , துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில் சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலிக்காட்சி வாயிலாக திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் சார்பில் ரூ.3 கோடி மதிப்பீடில் முதலமைச்சரின் சிறுவிளையாட்டரங்கம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டி வைத்ததைத் தொடர்ந்து மணப்பாறை உசிலம்பட்டியில் நடைபெற்றவிழா நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் சரவணன், மணப்பாறை சட்டமன்ற உறுப்பினர் அப்துல் சமது ஆகியோர் கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி வைத்து திட்டப் பணிகளை தொடங்கி வைத்தார்கள். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் கங்காதாரிணி, ஸ்ரீ ரங்கம் வருவாய் கோட்டாட்சியர் சீனிவாசன், மாவட்ட விளையாட்டு அலுவலர் ஞானசுகந்தி, அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# பள்ளி கட்டுமான பணிகளுக்கு பூமி பூஜை: டிஇஓ பங்கேற்பு...!





வந்தவாசி, டிச 09:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த தெள்ளார் ஒன்றியம், சி.ம.புதூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிக்கு அறிஞர் அண்ணா தலைமைத்துவ விருதுக்காக வழங்கப்பட்ட ரூபாய் 10 லட்சம் செலவினங்களுக்கு பள்ளியின் கட்டுமானத்திற்கு பூமி பூஜை நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்வில் செய்யாறு மாவட்ட கல்வி அலுவலர் சி.வீரமணி, வட்டார கல்வி அலுவலர்கள் கோ.குணசேகரன், எ.பச்சையப்பன், வட்டார வள மையம் மேற்பார்வையாளர் ராஜா, கல்வியாளர் பொன்.சந்திரசேகரன், பள்ளி தலைமை ஆசிரியர் ஆர்.நம்பெருமாள், உதவி ஆசிரியை பாரதி,பள்ளிமேலாண்மை குழு தலைவர் தமிழ்ச்செல்வி, துணைத் தலைவர் துர்காதேவி, தெள்ளார் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் டிகேஜி ஆனந்தன் உள்ளிட்ட பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர். மேலும் பள்ளியின் சுற்றுச்சூழல், சத்துணவு பாராமரிப்பு, மாணவர்களின் கற்றல் திறன் உள்ளிட்டவைகளை டிஇஓ ஆய்வு மேற்கொண்டார்.



திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் சட்டமேதை பி. ஆர்.அம்பேத்கர் அவர்களின் நினைவு தினத்தையொட்டி அன்னாரது திருவுருவ படத்திற்கு மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் மலர் தூவி மரியாதை செலுத்தினார். இதில் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சுரேஷ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநரும் இணை இயக்குநருமான வை. ஜெயக்குமார், உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) ஜெயகுமார், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நல அலுவலர் செந்தில், உதவி இயக்குநர் நில அளவை பேச்சி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) வெங்கட்ராமன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



அமைச்சர் முத்துசாமி ஈரோடு கே. கே. நகர் ரயில்வே நுழைவு பாலம் அருகில் மழைநீர் செல்வதற்கு ஏதுவாக கூடுதல் கால்வாய் அமைப்பது குறித்து இரயில்வே துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறை சார்ந்த அலுவலர்கள் கலந்தாலோசனை மேற்கொண்டு செயல்படுத்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். உடன் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் சந்திரகுமார் உட்பட பலர் உள்ளனர்.

# ஈழத்தமிழ் சகோதரர் ஒருவரின் நெகிழ்ச்சிப் பதிவு.

2009 ஆம் ஆண்டு ஈழத்தில் நடைபெற்ற இறுதி யுத்தத்தின்போது ஈழத்திலிருந்து தமிழ்நாட்டிற்கு வந்த முன்னாள் போராளிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் ஆகிய ஏராள மானோர் தலைவர் அவர்களால் அவரது தோட்டத்தில் தங்கவைக் கப்பட்டு காயம் அடைந்தவர் களுக்கு உரிய மருத்துவ சிகிச்சைகள் அளிக்கப்பட்டு பத்திரமாக ஆஸ்திரேலியாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர் அக்குழுவைச் சேர்ந்த ஈழத்தமிழ் சகோதரர் ஒருவரின் நெகிழ்ச்சிப் பதிவு.



இன்று நான் சிட்னியில் இல்லாவிட்டாலும், வேல் முருகன் அண்ணாவைப் பற்றிச் சில வார்த்தைகள் பேசுவதில் எனக்கு மிகுந்த பெருமையும் மரியாதையும் உள்ளது.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு,நாங்கள் இந்தியாவிலிருந்து ஆஸ்திரேலியாவுக்கு இடம் பெயரத்தயாராகிக்கொண்டிருந்த போது, வேல்முருகன் அண்ணா எங்களதுவாழ்க்கைப் பயணத்தில் மிக முக்கியமான ஒரு பங்கு வகித்தார். அவர் எங்களை தனது பண்ணை வீட்டில் தங்க வைத்தார், எங்களுக்காக உணவு ஏற்பாடுகள் செய்தார், எங்கள் நிலைமை எப்படி இருக்கிறது என்று பலமுறை நேரில் வந்து பார்த்தார். அதோடு, அந்தச் சமயத்தில் அவர் மற்றும் அவரது குழுவினர் எங்களுக்கு பொருளா தார உதவிகளும் செய்தனர். அந்த கடினமான காலத்தில் அவர்களின் கருணையும் மனஉருக்கமும் எங்களுக்கு மிகுந்த தைரியத்தையும் ஆறுதலையும் அளித்தது.

வேல்முருகன் அண்ணாவின் ஆதரவினால்தான் நாங்கள் பாதுகாப்பாகவும் நம்பிக்கை யுடனும் ஆஸ்திரேலியாவில் புதிய வாழ்க்கையைத் தொடங்க முடிந்தது. அவர் செய்த உதவி ஒரு சில நிமிடங்களுக்கானதல்ல அது எங்களின் முழு எதிர் காலத்தையே மாற்றி அமைத்தது.

வேல்முருகன் அண்ணா, நீங்கள் எங்களுக்காக செய்த அனைத்திற்கும் நான் என்றும் நன்றியுணர்வுடன் இருப்பேன். பிறருக்கு உதவ வேண்டும் என்ற உங்கள் மனிதநேயமும் கருணை யும் என்றும் நினைவில் நிற்கும்.

தமிழீழப் போராட்டத்தின் இறுதி கட்டத்தில், சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு, முள்ளிவாய்க்காலில் ஆயிரக்கணக்கான நிரபராத தமிழர்கள் ஷ குழந்தைகள், முதியோர், சமூக தலைவர்கள், நமது குடும்பத்தினரும் உட்பட ஷ சிக்கி அளவிட முடியாத துன்பங்களை அனுபவித்தனர். பின்னர் அவர்கள் இலங்கை யிலிருந்து இந்தியாவுக்கு தப்பித்து வந்தபோது, நமது தமிழ் நாடு தொப்புள் கொடி உறவுகள் பல வகையில் எங்களுக்கு உதவினர்.

இன்று, மிகுந்த வேதனை யுடனும் மரியாதையுடனும் நன்றியுடனும், அந்தக் கடினமான காலங்களில் எங்களுக்கு துணை நின்ற நமது தமிழ் நாடு தொப்புள் கொடி உறவுகளை நாம் நினைவுகூர்கிறோம்.

இந்த வலியூட்டும் வரலாற்றுப் பக்கம் எங்களால் ஒருபோதும் மறக்க முடியாத ஒன்று. இன்று கூட, முள்ளிவாய்க்காலில் மரணத்திலிருந்து தப்பித்து வந்த பலரும் ஆஸ்திரேலியாவில் மருத்துவர்கள், மருத்துவ பணியாளர்கள்,பொறியாளர்கள், தொழிலதிபர்கள் உள்ளிட்ட பல நிலைகளில் கௌரவமாக வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் தங்கள் உழைப்பாலும் விடாமுயற்சியாலும் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்பியுள்ளனர்.

ஆஸ்திரேலியாவில் வாழும் தமிழர்களின் கருணையும் தாராள மனப்பான்மையும், குறிப்பாக வேல்முருகன் அண்ணாவும் அவரது குழுவும் வழங்கிய ஆதரவும், பல தமிழ் குடும்பங்களுக்கு இந்நாட்டில் பாதுகாப்பும் புதிய வாழ்க்கையும் கிடைக்கச் செய்த முக்கிய காரணங்களாகும். பல ஆண்டுகளாக அவர் தமிழ் குடும்பங்கள் அமைதியாக குடியேற தொடர்ந்து ஆதரவு வழங்கி வருகிறார்.

வேல்முருகன் அண்ணாவும் அவரது குழுவும் கடும் துன்பங்களை எதிர்கொண்ட மக்களுக்கு உதவுவதை ஒருபோதும் நிறுத்தியதில்லை. உணவு, தங்குமிடம், மருத்துவ உதவி, பொருளாதார உதவி என்று எல்லா வகையிலும் அவர்கள் தமிழ் குடும்பங்களுக்கு துணை நின்றுள்ளனர்.

இந்த நிகழ்வை ஏற்படுத்தியவர் களுக்கு நன்றியும் வணக்கமும்!

என்னால் இந்த சந்திப்பில் கலந்துகொள்ள முடியாமைக்கு வருந்துகிறேன். அன்றய கால கட்டதில் தமிழக பாதுகாப்பு கெடுபிடிகளுக்கு மத்தியில் எங்களுக்கு யாரும் உதவி செய்ய பயந்து ஒதுங்கி நின்ற நேரத்தில் தொப்புள் கொடி உறவினால் கட்டுண்டு நின்று எங்களை காத்த வேல்முருகன் அண்ணா வும் அவரது சகோதரருக்கும் வேல்முருகன் அண்ணாவின் குழுவினருக்கும் எனது நெஞ் சார்ந்த நன்றிகள். அவர்களின் சேவைகளை வெறும் நன்றிகளில் அடக்கி விட முடியாது ஆயினும் அவர்கள் நீடூழி வாழவும் அவர் பணி சிறப்புற்று அவருடைய இலட்சியத்தில் மென்மேலும் மேன்மை பெறவும் இயற்கையின் ஆசீர்வாதத்தை வேண்டுகிறேன்.

# புதுச்சேரி தவெக பொதுக்கூட்டத்தில் தமிழகத்தை சேர்ந்தவர்களுக்கு அனுமதியில்லை: ஆனந்த்

புதுச்சேரி: டிச.9–

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் தமிழக வெற்றிக் கழகம் நாளை (டிச.9) நடத்தும் பொதுக்கூட்டத்தில் அக்கட்சியின் தலைவர் விஜய், பங்கேற்று பேசுகிறார். இந்தக் கூட்டம் புதுச்சேரி உப்பளம் துறைமுக வளாகத்தில் நடைபெறுகிறது.

இந்நிலையில், தவெக தொண்டர்களுக்கு வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட் டுள்ளார் அக்கட்சியின் பொதுச் செயலாளர் ஆனந்த். இவர் புதுச்சேரியை சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அவரது அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

நாளை (செவ்வாய்க்கிழமை) புதுச்சேரி, உப்பளத்தில் காலை 10.30 மணிக்கு தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய்யின் ‘புதுச்சேரி மாநில மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி’ நடைபெற உள்ளது. காவல் துறை வழிகாட்டு நெறிமுறைகளின் படி, இந்த நிகழ்ச்சிக்குப் புதுச்சேரியை சேர்ந்த, க்யூஆர் குறியீட்டுடன் கூடிய நுழைவுச் சீட்டு வைத்திருக்கும் 5 ஆயிரம் பேர் மட்டுமே அனுமதிக்கப்படு வார்கள்.

புதுச்சேரியை ஒட்டியுள்ள தமிழக மாவட்டங்கள் உள்பட, தமிழகத்தைச் சேர்ந்த யாருக்கும் கண்டிப்பாக அனுமதி கிடையாது. கட்சியினரும், பொதுமக்களும் இதற்கு முழு ஒத்துழைப்பு தருமாறு அன்புடன் கேட்டுக்கொள் கிறோம்.

தன்னை நேசிக்கும் மக்களின் பாதுகாப்பில் எள்ளளவும் சமரசம் செய்துகொள்ளாதவர் தவெக தலைவர் விஜய். எனவே அவரது புதுச்சேரி மாநில மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியின் போது கழகத்தினரும், பொதுமக்களும் சில வழிகாட்டு நெறிமுறைகளைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

கர்ப்பிணிப் பெண்கள், கைக்குழந்தையுடன் இருக்கும் சகோதரிகள், முதியவர்கள், உடல்நலம் குன்றியோர், பள்ளிச் சிறுவர், சிறுமியர், மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கு இந்த மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்கு அனுமதி இல்லை. இவர்கள் வீட்டில் இருந்தபடியே நேரலையில் காணுமாறு பேரன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தலைவர் விஜய்யின் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிக்கு வரும் போதும், நிகழ்ச்சியை முடித்துவிட்டுச் செல்லும் போதும் அவரது வாகனத்தை இருசக்கர வாகனங்களிலோ அல்லதுவேறுவாகனங்களிலோ பின்தொடர்வது, போக்கு வரத்துக்கு இடையூறாகச் செயல்படுவது போன்ற செயல்களில் ஈடுபடுவதை அறவே தவிர்க்க வேண்டும்.

காவல் துறையின் வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி, விதிகளுக்கு உட்பட்டு நடந்துகொள்ள வேண்டும். போக்குவரத்து விதிகளை முழுவதுமாகப் பின்பற்ற வேண்டும். அனைத்து வகையான வரவேற்பு நடவடிக்கைகளுக்கும் அனுமதி இல்லை. எனவே கழகத்தினர் அவற்றைத் தவிர்க்க வேண்டும்.

மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெறும் பகுதிகளில் உள்ள அரசு மற்றும் தனியார் கட்டிடங்கள், மதில் சுவர்கள், மரங்கள், வாகனங்கள் (பஸ், வேன், ஆட்டோ மற்றும் இருசக்கர வாகனங்கள்), கொடிக் கம்பங்கள் ஆகிய வற்றின் மீது ஏறக் கூடாது. மின்விளக்குக் கம்பங்கள், மின் கம்பங்கள், மின்மாற்றிகள் ஆகியவற்றின் அருகில் செல்லக் கூடாது. சிலைகள் மற்றும் அவற்றைச் சுற்றி ஏதும் பாதுகாப்பு கிரில் கம்பிகள், தடுப்புகள் அமைக்கப்பட்டிருந் தால் அவற்றின் அருகில் செல் வதைத் தவிர்க்க வேண்டும்.

மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியின் போது, அப்பகுதிகளில் ஆம்புலன்ஸ் வாகனங்களுக்கும், பொது மக்களுக்கும், வாகன ஓட்டிகளுக்கும். பள்ளி மாணாக்கர்களுக்கும், பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் மற்றும் நோயாளிகளுக்கும் எவ்விதப் போக்குவரத்து இடையூறும் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும்.

மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி முடிந்தவுடன் அனைவரும் அமைதியான முறையில், யாருக்கும் எவ்வித இடையூறும் ஏற்படுத்தாமல் கலைந்து செல்ல வேண்டும். இவ்வாறு ஆனந்த் அந்த அறிக்கை வாயிலாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.



திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம் சத்திரஞ்ஜெயபுரம் கிராமத்தை சேர்ந்த இந்திய இராணுவத்தில் பணிபுரிந்து வீரமரணம் அடைந்த க.சக்திவேல் அவர்களின் பூத உடலுக்கு மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் அரசின் சார்பில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். இதில் திருத்தணி வருவாய் கோட்டாட்சியர் என்.எம்.கனிமொழி, திருத்தணி வட்டாட்சியர் குமார், உதவி இயக்குநர் முன்னாள் படைவீரர் நலன் வெங்கடேஷ் குமார் மற்றும் இறந்த இராணுவ வீரரின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

# பழுதடைந்த சாலையை சரி செய்து தர வேண்டுமென கோரிக்கை.



திருச்சி மாவட்டம் மணப்பாறை வட்டம் கருப்பூர் ஊராட்சி காரைக்குளத்தில் இருந்து கருப்பூர் வடக்கிப்பட்டி செல்லும் சாலை மேடு, பள்ளமுமாக பழுதடைந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இருசக்கர வாகனத்தில் செல்பவர் களும் நடந்து செல்பவர் களும் இந்த சாலை கடந்து செல்கையில் மிகவும் சிரமத்துக்கு உள்ளாகின்றனர் அவசர தேவைகளுக்கு செல்பவர்களும் ,பள்ளி கல்லூரிகளுக்கு செல்ப வர்களும் ,வேலைக்கு செல்பவர்களும் இந்த சாலையை கடந்து செல்கையில் சரியான நேரத்திற்கு செல்ல முடிவதில்லை. மழைக்காலங்களில் பள்ளங்களில் நீர் தேங்கி சாலை சரிவர தெரியாமல் விபத்துக்கு உள்ளாகும் நிலை ஏற்படுகிறது . ஆகவே இந்த சாலையை சரி செய்து மக்கள் பயன்பாட்டிற்கு ஏற் படுத்தி தர வேண்டுமென தமிழர் தேசம் கட்சியின் மணப்பாறை தெற்கு ஒன்றிய கழகச் செய லாளர் எம்.ஆர் முத்து சாமி தமிழக அரசுக்கும், நெடுஞ்சாலை துறைக்கும் கோரிக்கை விடுத் துள்ளார். சரி செய்வார்களா என பொறுத்திருந்து பார்ப் போம். இல்லையெனில் சாலை மறியல் ,போராட்டம் வெடிக்கும்.

# சேலத்தில் குடும்பத் தகராறில் மனைவியை அடித்துக் கொன்ற கணவர் கைது.

சேலம். டிச. 9–

சேலம் மாவட்டம்,தலைவாசல் அருகே மனைவியை அடித்துக் கொன்ற கணவரை போலீஸார் கைதுசெய்தனர்.

ஆத்தூர், தலைவாசலை அடுத்த புத்தூரைச் சேர்ந்தவர் கிருஷ்ணன் (60), ஓய்வுபெற்ற மின்வாரிய ஊழியர். இவரது மனைவி பெரியம்மாள் (58). தம்பதி இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்தது. மேலும், கிருஷ்ணனின் இரண்டாவது மனைவி தனியாக வசித்து வருகிறார்.

இந்த நிலையில் சனிக்கிழமை இரவு கிருஷ்ணனுக்கும், பெரியம்மாளுக்கும் இடையே தகராறு ஏற்பட்டது. அப்போது, பெரியம்மாளை கிருஷ்ணன் தாக்கியுள்ளார். இதில் பெரியம்மாள் கீழே விழுந்தார். அதன்பிறகு கிருஷ்ணன் வெளியே சென்றுவிட்டு ஒருமணி நேரம் கழித்து வீட்டுக்கு வந்துள்ளார்.

அப்போது, கீழே விழுந்த பெரியம்மாள் இறந்தது தெரியவந்துள்ளது. அதன்பிறகு பெரியம்மாள் இறந்துவிட்டதாகக் கூறி அடக்கம் செய்வதற்காக அவரது உடலை வீட்டில் வைத்துள்ளனர். இந்த நிலையில், பெரியம்மாள் இறப்பில் சந்தேகம் உள்ளதாக தலைவாசல் காவல் நிலையத்துக்கு ஞாயிற்றுக்கிழமை அதிகாலை புகார் சென்றது.

இதையடுத்து, அங்கு சென்ற காவல் உதவி ஆய்வாளர் மங்கையர்க்கரசன், கிருஷ்ணனிடம் விசாரணை நடத்தினார்.அதன்பிறகு பெரியம்மாளின் உடலைக் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்.

தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணையில் கிருஷ்ணன் அடித்ததால்தான் பெரியம்மாள் உயிரிழந்ததை போலீஸார் கண்டுபிடித்தனர். இதையடுத்து கிருஷ்ணனை தலைவாசல் போலீஸார் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சேலம் மத்திய சிறையில் அடைத்தனர்.

# பகுஜன் சமாஜ் கட்சியின் சார்பில் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் 69வது நினைவு தினம் அனுசரிப்பு.



திருக்கோவிலூர் டிச 09

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் வகுத்துத் தந்த டாக்டர் அம்பேத்கர் அவர்களின் 69வது நினைவு தினத்தை அனுசரிக்கும் விதமாக கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் நான்கு முனை சந்திப்பில் பாபா சாகேப் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு பகுஜன் சமாஜ் கட்சி மாவட்ட செயலாளர் பாலகிருஷ்ணன் தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப் பட்டது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்கள் மாவட்ட ஒருங்கிணைப் பாளர் சிவபெருமான், மாவட்ட தலைவர் ஜெ.பொன்னுரங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர் மேலும் நிகழ்ச்சியில் மாவட்ட துணைத் தலைவர் குப்புசாமி, மாவட்ட பொதுச்செயலாளர் பெ.ஆரோக்கிய செல்வம், மாவட்ட இளைஞரணி தலைவர், ஏழுமலை, உளுந்தூர்பேட்டை தொகுதி தலைவர் செம் மனந்தல் மணிகண்டன், திருக்கோவிலூர் ஒன்றிய தலைவர் மணிகண்டன், ரிஷிவந்தியம் ஒன்றிய செயலாளரர் குமார், விழுப்புரம் தண்டபாணி மற்றும் பழங்கூர் கிளை தலைவர் ஏழுமலை கிளை துணைச் செயலாளர் சதீஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கவின் ஆணவக் கொலை செய்யப்பட்ட வழக்கில் கைதான ஜெயபாலன் ஜாமின் மனு ஒத்திவைப்பு!

நெல்லை: நெல்லையில் கவின் ஆணவக் கொலை செய்யப்பட்ட வழக்கில் கைதான ஜெயபாலன் ஜாமின் மனு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ஜெயபாலன் ஜாமின் மனுவை டிச.15க்கு ஒத்திவைத்தது நெல்லை மாவட்ட வன்கொடுமை தடுப்பு நீதிமன்றம். காதல் விவகாரத்தில் கவின் கொல்லப்பட்ட வழக்கில் பெண்ணின் தந்தை, சகோதரர், உறவினர் கைது. உதவி சார்பு ஆய்வாளர் சரவணன், அவரது மகன் சுர்ஜித், உறவினர் ஜெயபாலன் சிறையில் உள்ளனர்.



தமிழக முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் ஆகியோர் சென்னையிலிருந்து காணொலிக்காட்சியின் வாயிலாக சேலம் மாவட்டம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் சார்பில் சங்ககிரி வட்டம் வடுகப்பட்டி கிராமம் மற்றும் எடப்பாடி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி ஆகிய இடங்களில் சிறு விளையாட்டரங்கத்திற்கு அடிக்கல் நாட்டி வைத்தார்கள். இதனைத் தொடர்ந்து அமைச்சர் இரா. இராஜேந்திரன், சேலம் மாவட்டம் எடப்பாடி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மகேஸ்வரி, மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் சிவரஞ்ச்ன, நகர்மன்ற தலைவர் பாஷா ஆகியோர் உள்ளனர்.

# திருபாச்சூரில் பி.ஆர்.அம்பேத்கர் நினைவு தினத்தை யொட்டி 2034 பயனாளிகளுக்கு ரூ.21.90 கோடி மதிப்பில் பல்வேறு துறை சார்ந்த நலத்திட்டங்கள் : மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் வழங்கினார்

திருவள்ளூர் டிச 09 :

சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகம் அரங்கில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம், கல்வி, சுயதொழில் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கிய நிகழ்வு காணொலி வாயிலாக மின்னனு திரையில் நேரலையில் திரையிடப்பட்டதை மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் பொது மக்களுடன் அமர்ந்து பார்வையிட்டனர்.



அதனைத்தொடர்ந்து திருவள்ளூர் மாவட்டம் திருபாச்சூரில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் பி.ஆர்.அம்பேத்கர் நினைவு தினத்தையொட்டி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, தாட்கோ, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, வேளாண்மைத் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, மகளிர் திட்டம், வருவாய் துறை, முன்னோடி வங்கி, ஊரக வளர்ச்சித் துறை, கூட்டுறவு துறை, மாவட்ட தொழில் மையம், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, தமிழ்நாடு மின்சார வாரியம் ஆகிய துறைகள் சார்பில் 2034 பயனாளிகளுக்கு ரூ.21.90 கோடி மதிப்பிலான பல்வேறு துறை சார்ந்த நலத்திட்டங்களை மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி.இராஜேந்திரன் (திருவள்ளூர்), ஆ.கிருஷ்ணசாமி (பூவிருந்தவல்லி), எஸ்.சந்திரன் (திருத்தணி), டி.ஜே.கோவிந்தராஜ் (கும்மிடிப் பூண்டி), துரை சந்திரசேகர் (பொன்னேரி) ஆகியோர் வழங்கினர்.

முன்னதாக 2034 பயனாளிகளுக்கு ரூ.21.90 கோடி மதிப்பிலான விலையில்லா தையல் இயந்திரம், பட்டா, கல்விக்கடன், சுய தொழில் கடன், மகளிர் சுய உதவிக்குழு வங்கி கடன் இணைப்பு, இயற்கை பேரிடர், இறப்பு நிவாரணம் ஆகிய நலத் திட்டங்கள் வழங்கப்பட்டது. இறுதியில் 750 நபர்களுக்கு சமத்துவ உணவு பரிமாறப்பட்டது.

இதில் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சுரேஷ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநரும் இணை இயக்குநருமான வை.ஜெயக்குமார், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நல அலுவலர் செந்தில், திருவள்ளூர் நகர்மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன் மற்றும் பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், ஈரோடு மாவட்டத்தில் போதை பொருட்கள் தடுப்பு ஆய்வு கூட்டம் நேற்று நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்டத்தில் போதைப் பொருட்கள் நடமாட்டத்தை கட்டு ப்படுத்துவது மற்றும் சட்டவிரோதமான முறையில் நடைபெறும் குற்றங்களை தடுப்பது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வுக் கூட்டத்திற்கு ஈரோடு மாவட்ட ஆட்சியர் ச. கந்தசாமி தலைமை வகித்தார். மேலும் ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அ. சுஜாதா, மாவட்ட கலால் பிரிவு தாசில்தார் தியாகராஜன் மற்றும் துணை சார்ந்த அதிகாரிகள் ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

# மத்திய அரசின் தொழிலாளர் விரோத சட்டங்களை கைவிடக் கோரி இடதுசாரிகள், விடுதலைச் சிறுத்தைகள் கட்சிகள் இணைந்துகண்டன ஆர்ப்பாட்டம்






மணப்பாறை நவ 09

திருச்சி ஜங்ஷன் காதி கிராப்ட் ராஜீவ் காந்தி சிலை அருகில், நாம் வாழும் இந்த நூற்றாண்டில், நிதிமூலதனமும், உற்பத்தி மூலதனமும் உலக பணக்காரர்கள் முதல் உள்ளூர் பணக்காரர் வரை எண்ணிக்கை அதிகரிப்பது மட்டுமல்ல அவர்களின் சொத்துகுவிப்பும் அதிகரித்து வருவதை பார்க்கிறோம். பாஜக ஆட்சிக்கு வந்ததிலிருந்து 70 பேர் 100 கோடி சொத்து வைத்திருந்தவர்கள் 358 நபர்களாக உயர்ந்துள்ளனர். அதானியின் சொத்து மதிப்பு 2014ல் 63190 கோடியாக இருந்து தற்போது ரூ.10.32,400 கோடியாக உயர்ந்துள்ளது. அம்பானியின் சொத்து ரூ.1,65,540 கோடியிலிருந்து 10.63,550 கோடியாக உயர்ந்துள்ளது. அவர்களுக்கு அளிக்கப்பட்ட சலுகை 542%ம் உயர்வாகும். இந்த கார்ப்பரேட் முதலாளிகளை கொழுக்க வைக்கவாஜ்பாய்காலத்திலிருந்தே சட்டங்களை திருத்த பெருமுயற்சி எடுத்து வருகிறது பாஜக,

ஒன்றிய அரசால் 21.11.25ல் அறிவிக்கப்பட்ட லிணீதீஷீஜீக்ஷீ சிஷீபீமீ திருத்தத்தால் பலன் அடைவது தொழிலாளியா? முதலாளியா? தொழிலாளர் எண்ணிக்கையில் 90% பேரை சட்ட பாதுகாப்பற்றவர்களாக ஆக்குகிறது. 50 கோடி முறை சாரா தொழிலாளர்களுக்கு சிறிய அளவில் பாதுகாப்பு வழங்கும் மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ள தொழிலாளர் நலவாரியங்கள் முடக்கப்பட்டு அதிலுள்ள பல ஆயிரம் கோடி நிதிகளை மத்திய அரசின் திட்டத்திற்கு மடைமாற்றம் செய்யப்பட உள்ளது.

வேலை நேரம் இனிமேல் 8 மணி நேரம் இல்லை. அதற்கும் கூடுதலாக, எவ்வளவு நேரம் என்பதை முதலாளி நிர்வாகம் முடிவு செய்யும். போனஸ் 2 ஆண்டுகள் வரை கொடுக்காமல் இருக்கலாம். நிரந்தரமாக தொழிலாளி வைக்க வேண்டியதில்லை. எல்லோரும் அத்து கூலிகள். அதுவும் சம்பளம் ஒப்பந்ததார் மூலம் தான் வழங்கப்படும், வேலைக்கு அமர்த்துவதும் வேலை இல்லை என விரட்டுவதுமான உரிமை முதலாளிக்கு வழங்கப்பட்டுள்ளது. குறைந்தபட்ச சம்பளம், சமூக பாதுபாப்பு இனி இல்லை. அது மட்டுமா? தொழிலாளர்களின் பாதுகாப்பு அரண் தொழிற்சங்கம் சேரும் உரிமை, தொழிற்சங்கம் அமைக்கும் உரிமை, ஏன் வேலை நிறுத்தம் செய்வதும் முதலாளிகளின் விருப்பத்திற்குட்பட்டதாக மாற்றப்பட்டுள்ளது.

வேலை வாய்ப்பு பெருகுமா? இருக்கும் தொழிலாளர்களின் வேலை நேரத்தை கூட்டுவது, வேலைவாய்ப்பை முடக்குவதுதான். வேலை நிறுத்தம் செய்தால் ஓராண்டு சிறை தண்டனை, தூண்டினால் இரண்டாண்டு, ஏன் ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் கூடி கோரிக்கை மனு கொடுத்தாலோ, கோஷம் போட்டாலோ கிரிமினல் குற்றம் பதிவு செய்து 3 ஆண்டு சிறை தண்டனை. யாருக்காக? இது யெல்லாம் யாருக்காக? தொழிலாளர் நலனுக்காகவா?

மொத்தத்தில் 150 ஆண்டு காலமாக தொழிலாளர் பெற்று வந்த உரிமைகளை, சலுகைகளை பறித்து கார்ப்பரேட்டுகளின் காலடியில் தொழிலாளர்கள் இருக்க வைக்கப்பட்டுள்ளார்கள். தொழிலாளர் வர்க்கத்தின் மீது மூர்க்கத்தனமான தாக்குதலை பிஜேபி மோடி அரசு தொடுத்துள்ளது.

இனியும் அழுது கொண்டிருப்போமா? 150 ஆண்டு காலமாக தொழிலாளர்கள் பெற்று வந்த உரிமைகள், சலுகைகள், ஆட்சியாளர்கள், முதலாளிகள் இரக்கப்பட்டு தந்ததல்ல, ரத்தம் சிந்தி, பொய் வழக்கு, சிறை தண்டனை, அடக்குமுறை, துப்பாக்கி தோட்டாக்களால் துளைத்தெடுக்கப்பட்ட உயிர்கள், இத்தனைக்கும் பிறகு தான் நெஞ்சை நிமிர்த்துகிறது தொழிலாளி வர்க்கம். 21.11.25 மோடி அரசால் அறிவிக்கப்பட்ட சட்டத்தை தொழிலாளி வர்க்க படை திரட்டி முறித்து போட்டு மூலையில் தூக்கி எறிவோம். முழக்கத்தோடு கண்டன ஆர்ப்பாட்டம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ,சி.பி.எம் வி.சி.க ,சி.பி.எம்.எல் சார்பில் நடைபெற்றது

இவ் ஆர்ப்பாட்டத்திற்கு மாநகர் மாவட்ட செயலாளர்கள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சிவா ,சி.பி.எம் வெற்றிச்செல்வம் வி.சி.க கிழக்கு மாவட்டம் ,கனியமுதன் சி.பி.எம்.எல் மாவட்ட செயலாளர் ராஜ்குமார் ஆகியோர் தலைமை வகித்தனர் புறநகர் மாவட்ட செயலாளர்கள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி,ராஜ்குமார் சி.பி.எம் சிவராஜ் வி.சி.க கிழக்கு மாவட்டம் ,குரு. அன்புச்செல்வன் வடக்குமாவட்டம் வழக்கறிஞர். மா.கலைச்செல்வன் தெற்கு மாவட்டம் சி.சக்தி ஆற்றலரசு மாநகர் மேற்கு புல்லட் லாரன்ஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர் தமிழ்நாடு விவசாய சங்க மாநில துணைச் செயலாளர். த.இந்திரஜித் சிபிஎம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னதுரை, மாநிலக்குழு உறுப்பினர் எம்.ஜெயசீலன் சிபிஐ மாமன்ற உறுப்பினர் க.சுரேஷ், விடுதலை சிறுத்தைகள் மண்டல அமைப்பு செயலாளர் வழ.ச.விவேகானந்தன் சி.பி.எம்.எல் ஞானதேசிகன் ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினார்கள் அனைவருக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி புறநகர் மாவட்ட பொருளாளர் ஜனசக்தி உசேன் நன்றி கூறினார்

# புதுச்சேரியில் 'நீதிகதிர் எக்ஸ்பிரஸ்' நாளிதழ் செய்தியாளர்கள் ஆலோசனை கூட்டம்: ஆசிரியர் கா. சபியுல்லா அறிவுரை!



புதுச்சேரி: டிச.9–

புதுச்சேரி கடலூர் சாலையில் உள்ள ஒரு தனியார் திருமண மண்டபத்தில், 'நீதிகதிர் எக்ஸ்பிரஸ்' காலை நாளிதழ் சார்பில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மாநில செய்தியாளர்கள் கலந்தாய்வு மற்றும் ஆலோசனை கூட்டம் (டிசம்பர் 7)நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு நாளிதழின் ஆசிரியரும் வெளியீட்டாளருமான கா. சபியுல்லா தலைமை தாங்கினார். செய்தி ஆசிரியர் எம்.சி. ஆசிக் முஸ்தபா மற்றும் நிர்வாக ஆசிரியர் சதாசிவம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் பேசிய ஆசிரியர் கா. சபியுல்லா அவர்கள், தான் கடந்து வந்த பாதையை ஒரு கதையாக விவரித்து, வாழ்க்கையில் சவால்களை எதிர்கொண்டு எப்படி ஜெயிக்க வேண்டும் என்பதை செய்தியாளர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் சுட்டிக்காட்டினார்.

அதனைத் தொடர்ந்து, கூட்டத்தில் கலந்து கொண்ட செய்தியாளர்கள் மற்றும் ஒளிப்பதிவாளர்கள் தங்களுக்கு இருக்கும் குறை, நிறைகள் மற்றும் களப்பணியில் உள்ள சவால்கள் குறித்து ஆசிரியரிடம் நேரடியாகக் கலந்து ஆலோசித்தனர்,

இக்கூட்டத்திற்கான முழு ஏற்பாடுகளையும் புதுச்சேரி மாநில தலைமை செய்தியாளர் மணிகண்டன் செய்திருந்தார்.

# சின்னசேலம் தமிழ்ச்சங்கம் சார்பில் ஹைக்கூ திருவிழா.



கள்ளக்குறிச்சி டிச 09

கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் தமிழ்ச் சங்கமும், அறம் செய விரும்பு கல்வி மற்றும் சமூக தொண்டு அறக்கட்டளையும் இணைந்து நிகழ்த்திய பண்டித நேரு படத்திறப்பு விழா இனிக்கும் காற்று நூல் வெளியீட்டு விழா,

ஹைக்கூ கவிஞர்களுக்கு விருது வழங்கும் விழா என மாபெரும் ஹைக்கூ திருவிழா சின்ன சேலம் அரிசி ஆலை அரங்கத்தில் சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கு கள்ளக்குறிச்சி கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் ஜெ. தர்மராஜா தலைமை வகித்தார். விழா தொடக்கவுரையை தமிழ்த்துறை தலைவர் ம. மோட்ச ஆனந்தன் ஆற்றினார். விழா நோக்கவுரையை சின்ன சேலம் தமிழ்ச்சங்க தலைவர் கவிஞர். கவிதைத்தம்பி ஆற்றினார். சின்னசேலம் தமிழ்ச் சங்க காப்பாளர்கள் முனைவர் அருணா தொல்காப்பியன், அசோகன், செந்தில் குமார், செயலாளர் அம்பேத்கர் ஆகியோர் முன்னிலை உரை நிகழ்த்தினர்.

கவிஞர் ராதா கிருஷ்ணன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

பண்டித நேரு படத்தை மரு பொன் க. ரத்தினவேலு திறந்து மலர் தூவினார். ஆசிரியர் மு முருகன் இனிக்கும் காற்று எனும் ஹைக்கூ தொகுப்பு நூலை வெளியிட்டார். தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலை கழகத்தின் முனைவர் பட்ட ஆய்வாளர் வாசுதேவன் நூலை திறனாய்வு செய்தார்.

விழாவில் தமிழ்நாடு முழுவதிலிருந்தும் 50க்கும் மேற்பட்ட கவிஞர்களுக்கு சங்கத்தின் சார்பில் ஹைக்கூ கவிச்சுடர் எனும் விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டது. கவிஞர் க கோபாலாகிருஷ்ணன், இரா. வெற்றிவேல், பெ கண்ணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். விழாவில் மதனேனாள் கபிரியேல், ஆசிரியர்கள் இராஜா, ராஜன், வேலு, இரா மணி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். நிறைவாக பொருளாளர் நடராஜன் நன்றி கூறினார்.



நாமக்கல் மாவட்ட வருவாய் அலுவலர் சரவணன் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் சார்பில் பயனாளிக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421